# 2. ஆனந்த பூர்த்தியுரம்.

உலகாக மல்கசர சரமென் பவற்றுளோ
ரூழின் றனந்தமாக
உளசுகத மொடுசுசா திவிசாதி பேதங்க
ளோதிடற் கேதுவாய
மலபாச நீக்கமா யப்பாச விரிவெலா
மயிர்நுனையு நாட்டுதற்கு
வயினின் றளாவிநிறை வாயுற்ற வாற்றலில்
வழுத்துதமி யேன்புறம்பா
விலகேனு னன்பர்கா ரணமே யிகுக்குமோர்
வியனருளை யானும்வேண்டி
வெய்துறல் கொளும்பட ரொழிக்குமா றென்னுளே
வெளியாவ தெக்கால்கொலோ
அலகிலா மாக்கருணை யுள்ளுவந் தருளுமின்
னருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 1

கருப்பாச யப்பிணிப் புக்குட் கிடந்தல்ல
கண்டமுறல் போலியற்கைக்
கருமலக் கட்டுளஞர் கொள்ளுயிர்க் கொவ்வுதனு
கரணாதி களைநல்கிநல்
உருப்பெற்ற வணுபக்ஷ மொடுசம்பு பக்ஷமெனு
முண்மைநிலை யோர்ந்தறிந்தின்
புறவெனத் தெண்ணூல் விரித்துநடை காட்டிமெய்
யுணர்த்தியுள வுன்றகைமைசால்

இரக்கமறி யாதார் பிறர்க்கிடர் விளைத்தபோ
திச்சையா லல்லலுறுபோ
தெய்யாமை யாற்செய்த கன்மபல நுகர்போ
தெமைப்பகவ னேன்பணினனென்
றரற்றுமட மென்கண்ணு மாருங்கொ லினியைய
வருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 2

**க**ண்டெரியு நீர்மையு நாவுருசி கணலுங்
கடந்திவளல் காணுடைமையுங்
காதுநற் புழனாசி கேட்டலு மணத்தலுங்
கால்கர நடந்துதொடலுந்
தொண்டைவாய் பயிறலும் பாயுமல நீக்கலுந்
தொள்ளையங் கத்துபத்தஞ்
சுகமதர்ப் புறலுமுள் ளளவுமார் வத்தின்மிகு
தோம்விளையு மன்றிமதிசால்
பண்டமதும் விளையுமோ பரமசுக மணையுமோ
படியிலவை யில்லையெனினும்
பயனற்ற முழுமூட மாமவைக ணல்வினைப்
பலனாளர் கட்கியாணர்
அண்டுதுணை யாநிற்கும் விதியிலே னென்செய்வே
னருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 3

**உ**ணர்வுவினை யாநிகழ் தசேந்திரிய முகையையு
முளத்தினையு முய்த்துநோக்கில்
உறுநன்று தீதெனு மிரண்டற்கு முபயோக
முள்ளபல வக்கரங்கள்
பணமொக்கு மெனுநடுத் தோன்றலி னவற்றின்
படர்ச்சியா மிருவினைக்கும்
பதியா யிருந்தபசு வேயலா னீயல்லை
பாத்திய பதார்த்தமென்று

தணவாத முடிவுசெய் திடலாம் விளக்கமுந்
தமசுநே ரவ்வினைகளே
சனனமர ணங்களென மேன்மேலு மாமென்றல்
சரதமிவை யோய்பொருட்டென்
அணுபக்ஷ முன்பக்ஷ மாகவே யுள்ளினே
னருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 4

**பு**வனமெவை யுஞ்செறிந் துயிர்தொறுங் காரண
புரத்துளே விரவிநிற்கும்
பொல்லாவல் லாணவத் திமிரமது தன்சத்தி
போய்க்கெடா மற்கெடற்கும்
இவர்போத விந்துவுங் கரணாதி பங்களு
மிலக்கம திழந்திடற்கும்
ஏசற்ற நுன்னருட் பானுத னியற்கையா
மெற்கற்றை பலபரப்பி
அவிர்பாணி யெனைநா னறிந்ததையு மஙனறிந்
தருள்யோக சுகபோகமாம்
அனுபவத் தின்மே லதீதத்தை யெய்துதற்
காகுநா ளாகுநாள்வே
றவதியுள நாளெலா மாகாத நாட்களே
யருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 5

**பா**சமென் றோதுதத் துவகணத் துள்ளுயிர்ப்
பாங்காக நின்றுழிதரும்
பரிசுடைய மனதன்றி யப்பாச முளதென்று
பயிலவும் வளாகமுண்டோ
ஆசையே வடிவமா யுள்ளவது வேமாயை
யையவிது தன்வசத்தே
ஆகாத காலமே பெத்ததசை முத்திதசை
யாங்கால மெவ்வாறெனிற்

காசினின் னருடனைத் தேடிடற் குரியவக்
கனமனக் கதலிவிதைதான்
காமர்வதி யோடே கலந்தவனு வுணர்வுகம
லத்தைநனி தெளிவித்தமேல்
ஆசறுமவ் வதியோடு தாழுமம் மனதுதந்
தருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 6

**பா**ர்வைகட் கெட்டாத தாயத்த மதுகொண்டு
பற்றிடற் கொண்ணாததாய்ப்
பவனமுந் தூமமும் புகுதா விடத்தினும்
பாடின்றி நுழைநுண்ணிதாய்க்
கார்விழிக் குப்புலப் பட்டவெலை மட்டுமொர்
கணத்துளே போய்மீள்வதாய்க்
கண்போலு மன்னிய பதார்த்தமன் றித்தனைக்
காணாத வுட்கண்ணதாய்ச்
சோர்வுமிங் கிதமுமுற் றொன்றைவிட் டொன்றனைத்
தொட்டுநிற் கும்பண்பியாய்ச்
சுசனமது போலவே சலனஞ் சுபாவமாச்
சுலவவுள நெஞ்சைவசமாய்
ஆர்வொடு செயாதாரு முனையறிய வல்லரோ
வருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 7

**இ**ந்திரிய முதலான நெஞ்சுவய மாயினரு
ளென்றபொருள் வயமாகுமன்
றெங்கணும் விகாதமென் பதுசிறிது மில்லா
தியாவுந்தன் வயமாமதைச்
சொந்தப் படுத்துமா றேயுபா யங்கள்பல
சோர்வற விதித்தவைகளைச்
சோபான முறைகொண்டு சரியைமுதன் மூன்றெனச்
சொல்லவுங் கைவந்ததைப்

பந்தகமில் சன்மார்க்க ஞானமென வும்பாகு
பாடுசெய் தவற்றுளடியேன்
பாழ்த்தநெஞ் சென்வயப் படவோ ருபாயவினை
பற்றவென் றாலுமவைகட்
கந்தமதை யேகருத வைத்ததா லினியொவா
தருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 8

**தா**மச மிராசச மெனுந்திற விருத்தியைச்
சார்மனம் புலவுபழைய
சாதமதி யுண்டிமா டங்கரிய தேனுவின்
றதியிவை துறந்தருந்து
நேமநிறை வாலே தமோகுணமும் வெங்கார
நீத்துண்ணு நேர்மையதனால்
நிகழ்கின்ற விராசசமு நீங்குபண் பானுமுண்
ணீலைத் தடுப்பதானும்
ஓமுதல வரிகளை விடாதுச்ச ரித்திடு
முரப்பானு முன்னுநினைவை
ஒருசேர முத்ரைகளில் வைப்பதா னுஞ்சிறி
துரங்குறைந் தேமயக்கம்
ஆமன்றி யருள்வெளியி லடையுமோ வடையுமா
றருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 9

**மா**னவ னுடற்குநிழ லன்னவா சாமூல
மலவுயிர்க் குள்ளபோத
வானிடை யெழும்புந்தி யானதுவு மப்போத
வானமு மொடுங்கவரிய
ஞானமய மானபே ரருளிலே தனதுசெய
னந்தநின் றிடல்கடனெனா
நவில்சரத சித்தாந்த நேரறிகி லார்க்கிந்த
ஞாயமோ துவதல்லவே

ஊனமில் லாதவிந் நிலையையுன் னடியனே
னுணருமா றருள்செய்தநீ
உற்றுய்ய வருளாது விடுவையோ நானும்விட்
டுழனெறி யினிச்சேர்வனோ
ஆனியறு மருணகிரி நாதனு ளுவந்தவோ
ரருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 10